# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP II & IIA
# UNIT - II

## தமிழ்நாட்டின் தொழில் வரைப்படம் (INDUSTRIAL MAP OF TAMIL NADU)

### 1. தமிழ்நாட்டின் தொழில் வழித்தடம்

**தொழில் வழித் தடங்கள் (Industrial Corridors)**

**சென்னை–பெங்களூரு தொழில் வழித்தடம்**

- ✓ டிட்கோ மற்றும் தேசிய தொழில் வழித்தட மேம்பாடு மற்றும் செயலாக்க அமைப்பு (NICDIT) இணைந்து, சென்னை–பெங்களூரு தொழில் வழித்தடப் பகுதியில் ''பொன்னேரி தொழில் முனையம்'' என்கிற ஒரு திட்டத்தை திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படுத்தி வருகின்றது. இம்முனையம், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள், சரக்குகள் கையாளுவதற்கான பிரத்தியேக சாலை மற்றும் இரயில் வழித்தடங்கள், சரக்கு ஆளுமை மையங்கள், மின்சாரம், பொது உட்கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் கூடிய தொழில் நகரியமாக உருவாக்கப்படும். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, காட்டூர் மற்றும் ஏப்ரஹாம்புரம் கிராமங்களில் சுமார் 650 ஏக்கர் நிலமும், சென்னை மாவட்டம், மாதவரம் மற்றும் திருவொற்றியூர் தாலுகாக்களில் உள்ள கொசப்பூர், மாத்தூர் மற்றும் அ.முல்லைவாயில் கிராமங்களில் சுமார் 530 ஏக்கர் நிலமும் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி தாலுகா, மாணலூரில் சுமார் 2,300 ஏக்கர் நிலமும் இத்திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டு, தொழில் நகரியங்களாக உருவாக்கப்படும். இதற்கான பெருந்திட்டம் தயாரிக்கும் பணிகள் ஆலோசகர் நிறுவனம் மூலம் நடைபெற்று வருகின்றன.

**கொச்சி–கோயம்புத்தூர்–பெங்களூரு தொழில் வழித்தடம் – தர்மபுரியில் தொழில் உற்பத்தித் தொகுதிகளை (கிளஸ்டர்) உருவாக்குதல்**

- ✓ தர்மபுரியில் சுமார் 1700 ஏக்கர் நிலப்பரப்பில் ''ஒருங்கிணைந்த உற்பத்தித் தொகுதி'' ஒன்றினை உற்பத்திக்கான மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் ''கொச்சி–கோயம்புத்தூர்–பெங்களூரு தொழில் வழித்தடங்களில்'' ''தேசிய தொழில் வழித்தட மேம்பாடு மற்றும் அமலாக்க டிரஸ்ட்'' வழங்கும் நிதியின் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வொருங்கிணைந்த உற்பத்தித் தொகுதித் திட்டத்திற்கான பெருந் திட்டத்தை (Master Plan) தயாரிக்கும் பணி, ஆலோசகரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம், மேற்கூறிய வழித்தடங்களில் உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளோடு பொருளாதார முன்னேற்றம், திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு பெருக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும்.

**சென்னை–கன்னியாகுமரி தொழில் பெருவழித் திட்டம்**

- ✓ மாநிலத்தில் துறைமுகம் சார்ந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு கடற்கரை பொருளாதார பெருவழித் திட்டத்தின் ஒரு பகுதியான சென்னை கன்னியாகுமரி பெருவழித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தபட்டு வருகின்றது. இப்பெருவழி, மாநிலத்தின் 23 மாவட்டங்களை உள்ளடக்கியது. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, நிதி உதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிய வளர்ச்சி வங்கி கீழ்க்காணும் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க அனுமதி அளித்துள்ளது:–
    - ✓ ரூபாய் 6641 கோடி மதிப்பீட்டில் 16 மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்துதல் திட்டம்,
    - ✓ ரூபாய் 4526 கோடி மதிப்பீட்டில் விருதுநகரில் 765 KV துணை மின் நிலையம் மற்றும் ஒட்டப்பிடாரத்தில் 400 KV துணை மின் நிலையம் மற்றும் இணைப்பு மின் பாதைகள் அமைத்தல்,

- ✓ இப்பெருவழித் திட்ட பகுதியில் தொழில் முனையங்களை அமைப்பதற்காக, மதுரை–திண்டுக்கல்–விருதுநகர்–தேனி, தூத்துக்குடி–திருநெல்வேலி, இராமநாதபுரம், கடலூர்–நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி–புதுக்கோட்டை–சிவகங்கை மற்றும் அரியலூர்–பெரம்பலூர் ஆகிய ஆறு முனையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் மதுரை–திண்டுக்கல்– விருதுநகர்–தேனி மற்றும் தூத்துக்குடி–திருநெல்வேலி ஆகிய இரண்டு தொழில் முனையங்கள் முதல் கட்டமாக செயல்படுத்த. திட்டத்திற்கான பெருந்திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பெருவழியில் தூத்துக்குடி, விருதுநகர், தேனி, சிவகங்கை, மணப்பாறை, இராமநாதபுரம் மற்றும் கங்கைகொண்டான் ஆகிய இடங்களில் தொழில் பூங்காக்களை சிப்காட் நிறுவனம் சொந்த நிதியில் அமைத்து வருகிறது. இந்த தொழில் முனையங்களில், விருதுநகர், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, மணக்குடி (இராமநாதபுரம்) மற்றும் சக்கரக்கோட்டை (இராமநாதபரம்) ஆகிய பகுதிகளில் பெரும்பான்மையான நில எடுப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு, தூத்துக்குடியில் பன்னாட்டு அறைகலன் பூங்கா, விருதுநகரில் பெரும் ஜவுளி பூங்கா, தேனியில் உணவுப் பூங்கா, சிவகங்கையில் பொதுத் தொழில் பூங்கா போன்ற துறை சார்ந்த தொழிற்பூங்காக்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட மேம்பாட்டிற்கு மேலும் நிதியுதவி பெற ஆசிய வளர்ச்சி வங்கியுடன் கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது.

2. **தமிழ்நாட்டின் கனிம வளங்கள்**

- ✓ வெர்மிகுலைட், மேக்னடைட், டுனைட், ரூட்டைல், செம்மணிக்கல், மாலிப்படினம் மற்றும் இல்மனைட் ஆகிய வளங்களில் தமிழ்நாடு முன்னணி உற்பத்தியாளராக உள்ளது. பழுப்பு நிலக்கரி 55.3%, வெர்மிகுலைட் 75%, டுனைட் 59%, செம்மணிக்கல் 59%, மாலிப்டீனம் 52% மற்றும் டைட்டானியம் 30% தாதுக்கள் நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பாகும்.
- ✓ மாநிலத்தில் காணப்படும் முக்கியமான தாதுக்கள் பின்வருமாறு: நெய்வேலி, மிகப்பெரிய பழுப்பு நிலக்கரி வளங்களைக் கொண்டுள்ளது. இராமநாதபுரம் பகுதிகளில் நிலக்கரி படிமங்கள் காணப்படுகின்றன. காவிரி வடிநிலப் பகுதியில் எண்ணெய் மற்றும் இயற்கைவாயு படிவுகள் காணப்படுகிறன.
- ✓ சேலம் மாவட்டத்தில் உள்ள கஞ்சமலையிலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலும் இரும்புத்தாது படிவுகள் காணப்படுகின்றன. சேலம் அருகே மேக்னசைட் தாது கிடைக்கின்றது. சேர்வராயன் குன்றுகள், கோத்தகிரி, உதகமண்டலம், பழனிமலை மற்றும் கொல்லிமலைப் பகுதிகளில் பாக்சைட் தாதுகள் காணப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஜிப்சம் கிடைக்கிறது.
- ✓ கன்னியாகுமரி கடற்கரை மணல் பரப்புகளில் இல்மனைட் மற்றும் ரூட்டைல் காணப்படுகிறது. கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுண்ணாம்பு கிடைக்கிறது. கோயம்புத்தூர், தர்மபுரி, கரூர், நாமக்கல், நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் மேக்னசைட் கிடைக்கிறது. பெல்ட்ஸ்பார்க், படிகக்கல், தாமிரம் மற்றும் காரீயம் ஆகியவை மாநிலத்தின் சில பகுதிகளில் காணப்படுகின்றன.

3. **தமிழ்நாட்டின் தொழிலகங்கள்**

- ✓ மூலப்பொருட்களை இயந்திரங்களின் மூலம் உற்பத்திப் பொருட்களாகவோ அல்லது பயன்படுத்தக்கூடிய பொருட்களாகவோ மாற்றப்படும் இடமே தொழிலகங்களாகும்.

**பருத்தி நெசவாலைகள்:**

- ✓ பருத்தி நெசவாலைகள் தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க நன்கு வளர்ந்த ஒரு தொழிலகமாகும். பருத்தி நெசவாலைகள் கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், பல்லடம், கரூர், திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய பகுதிகளில் அதிகமாக காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் பருத்தி ஆடைகள் உற்பத்தி செய்ய ஏறத்தாழ 3 லட்சத்து 50 ஆயிரம் விசைத்தறிகள் உள்ளன. இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 30 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள ஈரோடு கைத்தறி, விசைத்தறி மற்றும் ஆயத்த ஆடைகளின் விற்பனைக்கு புகழ்பெற்றது. 'கோயம்புத்தூர் தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்கள் நெசவுத்தொழில் மூலம் மாநில பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன. எனவே இப்பகுதி 'தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு' எனக் குறிப்பிட்டப்படுகிறது. கரூர் 'தமிழ்நாட்டின் நெசவுத்தலைநகரம்' என்றழைக்கப்படுகிறது.

**பட்டு நெசவுஆலைகள்:**

- ✓ நாட்டின் பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு நான்காவது இடத்தை வகிக்கிறது. 'காஞ்சிபுரம் பட்டு' என்பது அதன் தனித்தன்மை, தரம் மற்றும் பாரம்பரிய மதிப்பு ஆகியவற்றால் உலகம் முழுவதும் அறியப்படுகிறது. தமிழ்நாட்டின் ஆண்டு பட்டு உற்பத்தி ஏறத்தாழ 1,200 மெட்ரிக் டன்கள் ஆகும். காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை தமிழ்நாட்டின் முக்கிய பட்டு நெசவு மையங்களாகும். இராமநாதபுரத்தின் சில பகுதிகளில் செயற்கைப் பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**தோல் பதனிடும் தொழிலகங்கள்:**

- ✓ இந்தியாவில், தோல் பதனிடும் தொழிலகங்களில் தமிழ்நாடு 60% உற்பத்தியையும் காலணிகள், தோல் ஆடைகள், மற்றும் தோல் உபபொருட்கள் உற்பத்தியில் 38% பங்களிப்பையும் அளிக்கிறது. வேலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இராணிப்பேட்டை, ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் பதனிடும் தொழிலகங்கள் அமைந்துள்ளன. உற்பத்தி செய்யப்பட்ட தோல் மற்றும் தோல் சார்ந்த பொருட்கள் (தோல் ஆடைகள், கையுறைகள் மற்றும் தோல் காலணிகள்) ஏற்றுமதியில் 37% பங்களிப்புடன் வேலூர் முதன்மை மாவட்டமாக விளங்குகிறது. அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR) கீழ்மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஆய்வகம் (CLRI), சென்னையில் அமைந்துள்ளது.

**காகித தொழிலகம்:**

- ✓ தமிழ்நாட்டில் பல காகித தொழிலகங்கள் அமைந்துள்ளன. கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) அமைந்துள்ளன. இது செய்தித்தாள், அச்சுக் காகிதம் மற்றும் எழுதப் பயன்படும் காகிதம் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றது. 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிலகம் ஆண்டுக்கு 2.45 லட்சம் மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி செய்யும் திறன் பெற்றது.
- ✓ தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் உலகளவில் திறன்படைத்த ஆலைகளில் ஒன்றாகும். இவ்வாலை கரும்புச்சக்கை மற்றும் மரக்கூழிலிருந்து பலவகையான காகிதங்களை சிறந்த தரத்துடன் உற்பத்தி செய்கின்றன.

- ✓ காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள புக்காதுரை, பவானிசாகர், பள்ளிபாளையம், பரமத்தி வேலூர், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, தொப்பம்பட்டி, நிலக்கோட்டை மற்றும் சேரன்மாதேவி ஆகியன மாநிலத்தில் உள்ள மற்ற காகித ஆலைகளாகும்.

**சிமெண்ட் தொழிலகம்:**

- ✓ சிமெண்ட் தொழிலகம் பொருளாதார மந்த நிலையிலும் உற்பத்தி மற்றும் நுகர்வில் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. இந்தியா மிகப்பெரிய சிமெண்டு உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாகவும், 181 மில்லியன் டன்கள் வருடாந்திர உற்பத்தியுடன் உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கும் நாடாகவும் உள்ளது. தமிழ்நாட்டின் முக்கிய சிமெண்ட் உற்பத்தியாளர்களில், தமிழ்நாடு சிமெண்ட் கழகமும் (TANCEM) ஒன்றாக உள்ளது. அரியலூர் மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் சிமெண்ட் உற்பத்தி ஆலைகள் இயங்குகின்றன. ஆலங்குளத்தில் உள்ள கல்நார் சிமெண்ட் அட்டை அலகும், விருத்தாசலத்தில் உள்ள கற்கலன் குழாய் அலகு ஆகியன மாநிலத்தின் மற்ற அலகுகளாகும். சங்கர் சிமெண்ட், ஜுவாரி சிமெண்ட், அல்ட்ராடெக் சிமெண்ட், மதராஸ் சிமெண்ட் மற்றும் டால்மியா சிமெண்ட் ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தனியார் சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்களாகும்.

**தகவல் தொழில்நுட்பம்:**

- ✓ தேசிய மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவன கூட்டமைப்பின்படி (NAASCOM) இந்தியாவின் மொத்த மென்பொருள் ஏற்றுமதியில் தென்மாநிலங்கள் தொடர்ந்து மேலானப்பங்களிப்பை செய்துவருகின்றன. தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்கள் இணைந்து இந்தியாவின் மொத்த மென்பொருள் ஏற்றுமதியில் 59.6%ஐ செய்கின்றன. நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியில் கர்நாடகாவுக்கு அடுத்ததாக தமிழ்நாடு இரண்டாவது பெரிய ஏற்றுமதி செய்யும் மாநிலமாக உள்ளது.

**சிறப்புப் பொருளாதார மண்டலம்:**

- ✓ சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சர்வதேச அளவில் மிகச்சிறந்த பகுதிகளாகவும் ஏற்றுமதியை ஊக்குவிக்கக்கூடிய சூழலைப் பெற்றதாகவும் உள்ளது. இம்மண்டலம் பல உற்பத்திப் பெருட்களை அளிப்பதுடன் பல்வேறு சேவைகளையும் அளிக்கிறது. நாங்குநேரி, எண்ணூர், ஓசூர் மற்றும் பெரம்பலூரில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைந்துள்ளன. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களான; டைடல் பூங்கா-2, டைடல் பூங்கா-3 மற்றும் உயிரி மருந்தகம் போன்றவை சென்னையிலும் டைடல் பூங்கா-4 கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன.

**பொறியியல் உற்பத்தி தொழிலகங்கள்:**

- ✓ உற்பத்தித் தொழில் என்பது மாநிலப் பொருளாதாரத்தின் துடிப்பான துறைகளில் ஒன்றாகும். இது பொறியியல் உற்பத்தி தொழில்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கிறது. வாகனங்கள் மற்றும் இதரபாகங்கள் உற்பத்தி, வாகன உற்பத்தி, மூல உலோகம் மற்றும் உலோகக் கலவைத் தொழில்கள், உலோகப் பொருட்கள் மற்றும் பழுதுபார்க்கும் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. தொழில்துறை உற்பத்தியில் தமிழ்நாட்டின்பங்கு நாட்டின் உற்பத்தியில் ஏறத்தாழ 11 முதல் 12% வரையிலும், மென்பொருளை தவிர்த்து நாட்டின் ஏற்றுமதியில் 15% பங்களிப்பு செய்கின்றன. இந்தியாவின்மென்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 17% சதவீதமாகும்.

**வாகனத் தொழிலகங்கள்:**

- ✓ வாகன உற்பத்தி மற்றும் கனரகவாகன உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு குறிப்பிடத்தக்க அளவிலுள்ளது. வாகனத் தொழிலகம் மாநிலப் பொருளாதாரத்தில் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கின்றது. மாநிலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீத பங்களிப்பினை அளிப்பதுடன் 2 லட்சத்து 20 ஆயிரம் மக்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும் வழங்குகிறது.
- ✓ இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் வாகனத் தொழில்களில் 21% பயணிகள் மகிழுந்து, 33% வணிக வாகனங்கள் மற்றும் 35% வாகன உதிரிபாகங்கள் ஆகியன தமிழ்நாட்டின் அதிகமான பங்களிப்பாகும். போர்டு, ஹூண்டாய், எச் எம் மிட்சுபிவி, அசோக் லைலாண்ட் மற்றும் வேளாண் கருவிகள் நிறுவனம் (TAFE) (இழுவை இயந்திரம்) (Tractor), ஆகியவற்றின் உற்பத்திக் தளங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

**இரசாயன மற்றும் வார்ப்புப் பொருள் தொழிலகம்:**

- ✓ இரசாயன தொழிலகம், பொருளாதாரம் மற்றும் தொழிற்துறையில் வேகமாக வளர்ந்து வரும் ஒன்றாகும். இது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதமும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 8 சதவீதமும் பங்களிப்பு செய்கின்றன.

**கைத்தறி மற்றும் விசைத்தறி:**

- ✓ கைத்தறித் துறையானது மாநிலத்தில் மிகப்பெரிய குடிசைத் தொழிலாகும். இது கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதாரத்தையும் ஏற்றுமதி வருவாயையும் அளிக்கின்றன. கைத்தறித் துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகளில் 4.29 இலட்சம் நெசவாளர் குடும்பங்கள் மற்றும் 11.64 இலட்சம் நெசவாளர்களுக்கு நல்ல வருவாயுள்ள வேலைவாய்ப்பினையும் அளிக்கின்றது. நெசவாளர் சங்கங்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு விலையில்லா சீருடையும், விலையில்லா வேட்டி மற்றும் சேலை' திட்டத்திற்கு தேவையான துணிகளையும் உற்பத்தி செய்கின்றன.


**சர்க்கரைத் தொழிலகம்:**

- ✓ தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழிலகம் ஒரு வேளாண்சார்ந்த தொழிலகமாகும். கிராமப்புற பகுதிகள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்கினை வகிக்கிறது. சர்க்கரைத் தொழிலகங்கள் பல ஆயிரம் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், கரும்பு பயிர்சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் இதரப் பணிகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் போன்ற பல இலட்சம் மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பையும் வழங்குகின்றன. தமிழ்நாட்டில் மொத்தம் 34 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில் 16 கூட்டுறவுத் துறையாலும் 18 தனியார் துறையாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

**சுற்றுலாத்துறை:**

- ✓ சுற்றுலாத்துறை ஒரு தொழிலகமாகக் கருதப்படுகிறது. ஏனெனில் இதில் ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. சமீப காலங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னணித் தலங்களில் ஒன்றாக தமிழகம் உருவாகிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தால் (TTDC) ஊக்குவிக்கப்படுகிறது. இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு ரூபாய் 25 கோடி (2013) வருவாயை ஈட்டி, முதன்மை மாநிலமாக திகழ்கின்றது. இத்தொழிலின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 16% ஆகும். ஆண்டிற்கு ஏறத்தாழ 28 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் 11 கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் தமிழகத்திற்கு வருகை தந்துள்ளனர். பழங்கால நினைவுச் சின்னங்கள்,

புனிதத்தலங்கள், மலைவாழிடங்கள், பலவகையான இயற்கை நிலத்தோற்றங்கள், நீண்ட கடற்கரை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றுடன் தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளுக்கு மிகச் சிறந்த மாநிலமாக உள்ளது.





## 4. தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்

**தானியங்கி தொகுப்புகள்:**

- ✓ சென்னை பெரிய அளவிலான வாகனத் தொழில்துறை தளமாக இருப்பதால் ''ஆசியாவின் டெட்ராய்ட்'' என்று அழைக்கப்படு கிறது. சென்னையானது மிக அதிகமான தானியங்கி தொழிற்சாலை தானியங்கி தொழிலை ஒருங்கிணைக்கும் மற்றும் உதிரிபாகங்கள் செய்யும் தலைமை இடமாகத் திகழ்கிறது. சில உள்நாட்டு நிறுவனங்களான TVS, TI சைக்கிளஸ், அசோக் லேலண்ட் மற்றும் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் ஆகியன இதற்கு முன்னர் இருந்தன. பொருளாதார சீர்த்திருத்தத்திற்கு பின்னர் ஹுன்டாய், ஃபோர்டு, டைம்லர்பென்ஸ் மற்றும் ரெனால்ட் – நிசான் போன்ற பல பன்னாட்டு நிறுவனங்கள் (Multi National Companies) (MNC) இப்பகுதியில் தொழிற்சாலைகளைத் திறந்துள்ளன. எனவே வெளிநாடுகளிலிருந்து பல உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளரின் கவனங்கள் இங்கே ஈர்க்கப்பட்டுள்ளது. பல உள்நாட்டு நிறுவனங்களும் சேர்ந்து அனைத்து நிறுவனங்களுக்கான உதிரி பாகங்களின் உற்பத்தித் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.
- ✓ ஒசூர் மற்றொரு தானியங்கி தொகுப்பாகும். இங்கு TVS மற்றும் அசோக்லேலண்ட் போன்ற நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளை இயக்கி வருகின்றன. கோயம்புத்தூர் பகுதி ஒரு தானியங்கிகளின் தொகுப்பாக வளர்ந்து வருகிறது.

**வாகன மற்றும் பேருந்து கட்டுமானத் தொழில் தொகுப்புகள்:**

- ✓ தமிழகத்தின் மேற்கு பகுதியில் உள்ள நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு பகுதிகள் சுமை தூக்கும் வாகன முழுபாக கட்டமைப்பிற்கான தொழிற்சாலைகளுக்குப் பெயர் பெற்ற இடங்களாகும். சுமை தூக்கும் வாகனக் கட்டுமானத் துறையில் 150 தொழில்களில் 250 அலகுகளில் இந்த தொகுப்பில் 12 பெரிய அளவிலான சுமை தூக்கும் வாகனக் கட்டுமான துறைகள் உள்ளன.




- ✓ 50க்கும் மேற்பட்ட அலகுகளைக் கொண்டு கரூர் மற்றொரு முக்கிய மையமாகத் திகழ்கிறது. பல தொழில் முனைவோர்கள் பெரிய அளவிலான வாகனக் கட்டுமானத் துறையில் பணி புரிந்து தற்போது தங்கள் சொந்த அலகுகளை அமைக்க முன்வந்துள்ளனர்.

**நெசவுத் தொழில் தொகுப்புகள்:**

- ✓ இந்தியாவில் மிகப்பெரிய நெசவுத் தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது. காலனித்துவ காலத்திலிருந்து பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் ''தென்னிந்தியாவின் மான்செஸ்டர்'' என அழைக்கப்படுகிறது. தற்போது நெசவு ஆலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள சிறு நகரங்கள் கிராமங்களுக்கு நகர்ந்துள்ளன. அவைகள் கோயம்புத்தூரைச் சுற்றி 100 முதல் 150 கி.மீ சுற்று வட்டார பகுதிகளாகும். எனவே நமது நாட்டின் மிகப் பெரிய பருத்தி நெசவு தொழில் உற்பத்தியில் தமிழகம் பெரும்பங்கு வகிக்கிறது.
- ✓ கோயம்புத்தூரைச் சுற்றி அருகிலுள்ள பல்லடம் மற்றும் சோமனூர் சுற்றி சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் நன்கு செயல்படும் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் தங்களது வீடுகளிலேயே சொந்தமாக உற்பத்தி செய்கின்றன. ஈரோடு மற்றும் சேலம் பகுதியிலும் அதிகளவிலான மின்தறி அலகுகள் இருப்பதால் மின்விசைத்தறித் தொழில் மிகவும் பரவலாக உள்ளது.
- ✓ திருப்பூரானது பின்னலாடை தயாரிக்கும் ஏராளமான நிறுவனங்களின் தொகுப்புகளுக்கு புகழ்பெற்ற இடமாகும். இது நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 80% பங்கினைக் கொண்டுள்ளது. 1980-ல் பிற்பகுதியிலிருந்து மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இது உள்நாட்டுச் சந்தையில் ஒரு மிகப்பெரிய உற்பத்தியாளராகத் திகழ்கிறது. இந்த மிகப்பெரிய வெற்றியின் காரணமாக உலகச் சந்தையில் உலகின் தெற்கு அரைக் கோளத்தில் ஒரு சக்தி வாய்ந்த தொகுப்பாக இந்த இடம் உள்ளது. ஆரம்பத்தில் உள்ளூர் தொழில்முனைவோரால் பெரும்பாலான நிறுவனங்கள்

தொடங்கப்பட்டன. தற்போது இந்தியாவின் மிகப்பெரிய முன்னணி பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் இங்கு தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ளனர்.

- ✓ வாகனக் கட்டுமானத் தொழிலமைப்பைத் தவிர மேசைத்துணி, திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள் போன்ற வீட்டு அலங்கார பொருட்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாக கரூர் உள்ளது. மேலும் பவானி மற்றும் குமாரபாளையம் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு தரை விரிப்புகளை உற்பத்திச் செய்யும் முக்கிய மையங்களாகத் திகழ்கின்றன.
- ✓ இத்தகைய நவீன தொகுப்புகளைத் தவிர பட்டு மற்றும் கைத்தறிப் புடவைகளுக்கு பிரபலமான மதுரை மற்றும் காஞ்சிபுரம் போன்ற பாரம்பரிய கைவினைத் தொகுப்புகளும் உள்ளன. இந்த விசைத்தறி தொகுப்புகளில் பல அலகுகள் பயன்படுத்தியதன் மூலம் புதுமைமயமாதலின் அளவை அடைந்தன.

**தோல் மற்றும் தோல் பொருட்களின் தொகுப்பு:**

- ✓ இந்தியாவின் 60% தோல் பதனிடும் உற்பத்தித்திறனையும் 38% தோல் காலணிகள் மற்றும் தோல் உதிரி பாகங்கள் அதனைச் சார்ந்த பொருட்களின் உற்பத்தியையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. வேலூர் அதனைச் சுற்றியுள்ள ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் உற்பத்தி மற்றும் பதனிடும் வசதியைக் கொண்டுள்ளது. தோல் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முதன்மை மாவட்டமாக வேலூர் திகழ்கிறது. சென்னையிலும் பல தோல் சார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழிற்சாலை நிறுவனங்கள் உள்ளன. திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தோல் பதனிடுதல் மற்றும் உற்பத்தித் தொழிற்சாலைகளின் தொகுப்பு காணப்படுகிறது. தோல் உற்பத்தித் தொழிற்சாலையும் வேலைவாய்ப்பை அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**பட்டாசு, தீப்பெட்டி மற்றும் அச்சிடுதல் தொகுப்பு:**

- ✓ தீப்பெட்டி உற்பத்தித் தொழிற்சாலையில் புகழ்பெற்று விளங்கும். சிவகாசி பகுதியானது தற்பொழுது பட்டாசு மற்றும் அச்சிடும் தொழிலில் நாட்டின் சிறந்த நகரமாகத் திகழ்கிறது. இந்தியா 90% பட்டாசு உற்பத்தி 80% பாதுகாப்பான தீப்பெட்டி உற்பத்தி மற்றும் 60% அச்சுப்பணி தேர்வுகளுக்கு முக்கிய பங்காக இதனையே சார்ந்துள்ளது. அச்சிடும் தொழிற்சாலை ஒவ்வொன்றும் அவற்றின் பணிகளில் தனித்துவம் பெற்று மேலோங்கி விளங்குகிறது. காலனித்துவ காலத்தில் தொடங்கப்பட்ட இத்தொழிலானது தற்பொழுது அதிகளவில் வேலை வாய்ப்பை அளிக்கிறது.

**மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொகுப்புகள்:**

- ✓ 1990-களில் ஏற்பட்ட பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பின் வந்த நோக்கியா, ஃபாக்ஸ்கான், மோட்டோரோலா, சோனி எரிக்ஸன், சாம்சங் மற்றும் டெல் போன்ற வன் பொருள் மற்றும் மின்னணு பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் கைபேசி கருவிகள், சுழல் பலகைகள், நுகர்வோர் மின் சாதனப் பொருள் தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்தன. இந்நிறுவனங்கள் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிறுவனங்களை நிறுவின.
- ✓ நோக்கியா நிறுவனம் மூடப்பட்ட போதிலும் சென்னை தொடர்ந்து நாட்டின் மின்னணு சாதன உற்பத்தியின் மையமாகவே உள்ளது.
- ✓ அதே போல் மென்பொருள் உற்பத்தித்துறை விரிவாக்கம் சென்னையிலும் குறிப்பிட்ட அளவு கோயம்புத்தூரிலும் மென்பொருள் உற்பத்தி சேவையில் சிறந்த மையங்களாக விளங்குகிறது.

5. **தமிழ்நாட்டில் தொழிற்சாலை விரிவாக்கத்திற்கு உதவும் கொள்கைக் காரணிகள்**

**கல்வி:**

- ✓ திறமை வாய்ந்த மனித வளங்கள் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிறது. நமது மாநிலமானது தொடக்கக் கல்விக்காக அதிகமான கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், படித்தவர்களின், எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்லாமல் அடிப்படை எண் கணித திறன்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது. இது நாட்டில் மிக அதிகப்படியான தொழில்நுட்ப வல்லுநர்களைத் தருவதிலும் பெயர் பெற்ற இடமாகும். இந்தியாவில் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையம் போன்றவைகளின் புகலிடமாக தமிழகம் உள்ளது.

**உள்கட்டமைப்பு:**

- ✓ மாநிலங்களில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தொழில்மயமாதல் மற்றும் பரவுதலுக்கு மின்சார விநியோகம் சிறப்பான பங்கினை வகிக்கிறது. மின்சார விநியோகம் மட்டுமல்லாது, தமிழ்நாடானது மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்குப் பெயர் போனது ஆகும். குறிப்பாக கிராமப்புற சிறு சாலை வசதிகளால் அருகிலுள்ள சிறு நகரங்களுடனும், பெரு நகரங்களுடனும் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டுள்ளது. பொது மற்றும் தனியார் போக்குவரத்துத் துறைகள் ஒருங்கிணைந்து கிராமப்புற மற்றும் நகர்புறங்களின் இணைப்பை எளிதாக்கியுள்ளது, சிறு உற்பத்தியாளர்களை சிறந்த சந்தைகளோடு இணைத்து அவர்களுக்கு நற்பலனைக் கொடுக்கிறது.

**தொழில்துறை ஊக்குவிப்பு:**

- ✓ கல்வி, போக்குவரத்து மற்றும் ஆற்றல் வாய்ந்த உள்கட்டமைப்புகளுக்கு முதலீடு செய்வது மட்டுமல்லாமல், சிறந்த தொழிற் பிரிவுக்கான தொழிற்சாலை விரிவாக்கங்களை சிறந்த பகுதிகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பொருளாதார சீர்திருத்தத்திற்கு பின் குறிப்பிட்ட காரணிகளான தானியங்கி, தானியங்கிக் கருவிகள், உயிரி தொழில்நுட்பம் மற்றும் செய்தி மற்றும் செய்தித் தொடர்புக்கான பிரிவுகள் சிறந்த முறையில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. எனவே பெரிய, சிறிய மற்றும் நடுத்தர பிரிவில் மேம்படுத்த உதவும் ஆதரவான உள்கட்டமைப்புகளை நாடு முழுவதும் பல இடங்களில் தொழில்துறை மேம்பாட்டு முகமைகளை அரசு நிறுவியுள்ளது.

**6. தமிழகத்தில் தொழில் விரிவாக்கத்திற்கு திறவுகோலாக செயல்படும் முகமைகள்**

- ✓ **தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் – வரையறுக்கப்பட்டது (TIC - Tamil Nadu Industrial Investment Corporation Ltd) 1949.**
- ✓ புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் தற்போதுள்ள தொழில்பிரிவுகளைபெருக்குவதற்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமானது குறைந்த அளவிலான நிதி உதவியைச் செய்கிறது. அனைத்து வகையான தொழில் நிறுவனங்களுக்கும் உதவும் என்றாலும் குறிப்பாக 90% மிகச்சிறு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இது உதவுகிறது.
- ✓ **தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகம் (TIDCO - Tamil Nadu Industrial Development Corporation) 1965.**
- ✓ நம் மாநிலத்தில் தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றுமொரு அரசு நிறுவனமாகும்.
- ✓ **தமிழ்நாடு சிறுதொழில் கழகம் வரையறுக்கப்பட்டது (TANSI – Tamil Nadu Small Industries Corporation Ltd) 1965.**

- ✓ தொழில் மற்றும் வணிக நிறுவனங்களால் அமைப்புத் துறையில் நிறுவப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, வரும் சிறுதொழில் அமைப்புகளை 1965இல் தமிழ்நாடு சிறுதொழில் கழகமானது (TANSI) தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. சிறு நிறுவனங்களுக்காக நிறுவப்பட்ட முதல் தொழில்துறை நிறுவனமாகும்.
- ✓ **தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO - Tamil Nadu Small Industries Development Corporation) 1970.**
- ✓ தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO) என்பது 1970ல் தமிழக அரசால் நம் மாநிலத்தில் சிறுதொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். சிறு தொழிற்பிரிவின் புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழிற் நுட்ப உதவிகளையும் இந்த நிறுவனம் வழங்குகிறது.
- ✓ **தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT - State Industries Promotion Corporation of Tamil Nadu), 1971.**
- ✓ தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (Sipcot) என்பது 1971ல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு, தொழிற் தோட்டங்களை அமைத்தது.

**7. கனிமவளம், உற்பத்தி மற்றும் வருவாய்**

- ✓ பெருங்கனிமங்கள், சிறுகனிமங்கள், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கனிமங்களை தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கனிமங்கள் தொடர்பான விபரங்கள் கீழ்கண்டவாறு:

**(அ) பெருங்கனிமங்கள்**

i. **சுண்ணாம்புக்கல்**

- ✓ இது சுண்ணாம்பு பவுடர், சிமெண்ட், இரசாயனங்கள், உரங்கள் ஆகிய உற்பத்தியிலும் மற்றும் உலோகத் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது. சுண்ணாம்புக்கல் இரண்டு வகைப்படும். அவை படிக சுண்ணாம்புக்கல்: இவை சேலம், திருச்சிராப்பள்ளி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கிடைக்கின்றன. இதன் மொத்த இருப்பு 200 மில்லியன் டன் என கணக்கிடப்பட்டுள்ளது.
- ✓ படிவ அல்லது தொல்லுயிர் சுண்ணாம்புக்கல்: இக்கனிமம், அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கிடைக்கின்றன. தொல்லுயிர் சுண்ணாம்புக்கல்லின் மொத்த இருப்பு 670 மில்லியன் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. சுண்ணாம்புக் கல்லினை வெட்டியெடுக்க 57 குத்தகைகள் 3380.96.0 ஹெக்டேர் பரப்பளவிற்கு வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

ii. **மார்ல்**

- ✓ மார்ல், சிமெண்ட் மற்றும் உரங்கள் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது. இக்கனிமமானது கடல் சூழல் தன்மையின் கீழ் உருவாகி தொல்லுயிர் சுண்ணாம்புக்கல் கனிமத்துடன் சேர்ந்து அரியலூர் மாவட்டத்தில் கிடைக்கிறது. இக்கனிமம் நடைமுறையிலுள்ள 5 சுண்ணாம்புக்கல் சுரங்கக் குத்தகைகளுடன் 174.38.0 ஹெக்டேர் பரப்பில் வெட்டியெடுக்கப்படுகிறது.

iii. **மாலிப்டினம்**

- ✓ கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் இந்திய கனிம ஆய்வு கழகத்தினரால் மாலிப்டினம் கனிம இருப்பு கண்டறியப்பட்டுள்ளது. மாலிப்டினம் கனிம இருப்பானது

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 0.699 மில்லியன் டன் எனவும், தருமபுரி மாவட்டத்தில் 8.350 மில்லியன் டன் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஒன்றிய அரசிடமிருந்து மாலிப்டினம் கனிமத்தின் சந்தை மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. ராயல்டி தொகை விவரம் ஒன்றிய சுரங்க அமைச்சகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. இம்முக்கிய கனிம தொகுப்புகள் பொது ஏலத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

iv. **பாக்சைட்**

- ✓ பாக்சைட் தாதுவிலிருந்து அலுமினிய உலோகம் பிரித்தெடுக்கப்படுகிறது. பாக்சைட் கனிமம் வெப்பம் தாங்கி கற்கள், சிமெண்ட், இரசாயனங்கள் மற்றும் வண்ணம் தயாரிக்கும்தொழிற்சாலைகளிலும் மற்றும் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலைகளிலும் பயன்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலை மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலை ஆகிய பகுதிகளில் தரமான பாக்சைட் கனிம படிவுகள் காணப்படுகின்றன. ஐந்து குத்தகைகள் 421.04.2 ஹெக்டேர் பரப்பளவில் வழங்கப்பட்டு உள்ளன.

v. **மேக்னசைட்**

- ✓ இது மெக்னீசியம் கார்ப்பனேட் கனிமமாகும். இவை உருக்காலையில் இளக்கியாகவும், வெப்பந்தாங்கி கற்கள், வெப்ப கட்டுப்படுத்தி, பீங்கான் தடுப்பான் மற்றும் உராய்வு பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. உலகில் உள்ள சிறந்த மேக்னசைட் கனிமங்கள் கிடைக்கப்பெறும் இடங்களில் சேலம் மாவட்டத்தில் உள்ள சுண்ணாம்பு மலையும் ஒன்றாகும். இதன் கனிம இருப்பு 40.5 மில்லியன் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க 80.28.5 ஹெக்டேர் பரப்பளவில் 2 குத்தகைகள் நடைமுறையில் உள்ளது.

vi. **கிராஃபைட்**

- ✓ இயற்கையிலேயே கிடைக்கும் இப்படிக நிலை கார்பன், உலோக உலை, மின்தடுப்பான், எலக்ரோடு, அணுஉலை மற்றும் வார்ப்பாலை ஆகிய தொழிற்சாலைகளில் பயன்படுகிறது. கிராஃபைட் கனிமம் சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டங்களில் கிடைக்கிறது. டாமின் நிறுவனம் சிவகங்கை மாவட்டத்திலுள்ள பூவந்தி கிராமத்தில் 237.39.5 ஹெக்டேர் பரப்பில் இக்கனிமத்தினை சுரங்கப் பணிகள் மூலம் வெட்டியெடுத்து வருகிறது.

vii. **வெர்மிகுலைட்**

- ✓ இது மஞ்சள் பழுப்பு நிறத்துடன் கூடிய மைக்கா வகையைச் சேர்ந்த கனிமமாகும். இவை மின்தடுப்பானகவும் மற்றும் வெர்மிடைல்ஸ் தயாரிக்கவும் பயன்படுகிறது. திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள செவத்தூர் கிராமத்தில் டாமின் நிறுவனம் 23.70.5 ஹெக்டேர் பரப்பில் இக்கனிமத்தினை குவாரிகள் மூலம் உற்பத்தி செய்து வருகிறது.

viii. **பழுப்பு நிலக்கரி**

- ✓ இது எரிபொருள் வகையைச் சார்ந்த கனிமமாகும். இக்கனிமம் நெய்வேலி, மன்னார்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் கிடைக்கிறது. இக்கனிமத்தின் மொத்த இருப்பு 34,764 மில்லியன் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரி இந்திய நிறுவனம் (NLCIL) கடலூர் மாவட்டத்தில் உள்ள நெய்வேலியில் 25,900 ஹெக்டெர் பரப்பில் இக்கனிமத்தினை குவாரிகள் மூலம் பிரித்தெடுக்கும் பணிகளை செய்து வருகிறது.

ix. **அணுவகை கனிமங்கள்**

- ✓ திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள தாது மணலில் அணு வகை கனிமங்களான மோனோசைட், கார்னெட், இல்மனைட், ரூடைல், சிலிமனைட், சிர்கான் மற்றும் லூக்காக்சி ஆகியவை கிடைக்கின்றன. தாது மணல் உராய்வு பொருட்களாகவும், குறைகடத்திகளாகவும் மற்றும் அனு உலைகளிலும் பயன்படுகிறது. இக்கனிமங்களை, இந்திய அருமணல் கழகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் குவாரிகள் மூலம் உற்பத்தி செய்து வருகிறது. கார்னெட் கனிமமானது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் படிவு நிலையிலும் மற்றும் மதுரை மாவட்டத்தில் பாறைகளிலும் கிடைக்கின்றன.
- ✓ ஒன்றிய அரசின் சுரங்க அமைச்சகம் 01.03.2019 நாளிட்ட ஆணையில் தாது மணல் மற்றும் இதர இடங்களில் கிடைக்கும் அணுசக்திவகை கனிம மணலில் உள்ள மோனோசைட் கனிமத்தின் செறிவினை 0.00% என நிர்ணயம் செய்துள்ளது.
- ✓ எனவே, இனிவரும் காலங்களில் அணுசக்திவகை கனிமங்களின் சுரங்க குத்தகையானது அணுசக்தி கனிமங்களின் சலுகை விதிகள் 2016-ன்படி அரசு நிறுவனம் அல்லது அரசிற்கு சொந்தமான அல்லது அரசு கட்டுப்பாட்டிலுள்ள பொது நிறுவனம் ஆகியவற்றிற்கு மட்டுமே வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்கனிமத்தினை பிரித்தெடுக்க 148.28.7 ஹெக்டேர் பரப்பளவில் இந்திய அருமணல் நிறுவனத்திற்கு 2 குத்தகைகள் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**(ஆ) சிறுகனிமங்கள்**

i. **கிரானைட்**

- ✓ செறிவு மிக்க கிரானைட் இருப்புகள் தமிழகத்தில் காணப்பெறுகின்றன. வெட்டி மெருகூட்ட தகுதி வாய்ந்த கடினமான படிக வகைப் பாறைகள் கிரானைட் என அழைக்கப்படுகிறது. 1970-களிலிருந்து இந்தியளவில் கிரானைட் உற்பத்தியில் தமிழகம் முன்னோடியாக திகழ்கிறது.
- ✓ கிரானைட் கற்களை பல்வேறு அளவுகளில் நினைவுச் சின்னங்களாகவும், ஓடுகளாகவும் வெட்டி மெருகூட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் கணிசமான அந்நிய செலாவணியை அரசுக்கு ஈட்டித் தருகிறது. கருப்பு நிற கிரானைட் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் கிடைக்கிறது. பலவண்ண கிரானைட் கிருஷ்ணகிரி, மதுரை, விருதுநகர், சேலம் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கிடைக்கின்றது. குன்னம் பிளாக், ஜீப்ரா ஒயிட், பாரடைசோ, ரெட்வேவ், டைகர்ஸ்கின், டெசர்ட் பிரவுன் மற்றும் காஷ்மீர் ஒயிட் ஆகியவை வணிக ரீதியாக தமிழகத்தில் கிடைக்கும் மிகவும் புகழ் பெற்ற கிரானைட் வகைகளாகும். இக்கனிமத்தை சுரங்க பணிகள் மூலம் வெட்டியெடுக்க தமிழ்நாட்டில் 336.46.6 ஹெக்டேர் பரப்பில் 27 கருப்பு கிரானைட் மற்றும் 83 பல வண்ண கிரானைட் குத்தகைகள் இயங்கிவருகின்றன.

ii. **ஜிப்சம்**

- ✓ இக்கனிமம் பிளாஸ்டர் ஆப் பாரீஸ் தயாரிப்பிலும் மற்றும் சிமெண்ட், உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது. இக்கனிமத்தினை குவாரி செய்வதற்கு கோயம்புத்தூர், பெரம்பலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 16.46.0 ஹெக்டேர் பரப்பில் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

iii. **தீக்களிமண்**

- ✓ இக்களிமண் வெப்பந்தாங்கி கற்கள், பீங்கான் பொருட்கள் மற்றும் அலங்கார ஓடுகள் தயாரிக்கவும் சிமெண்ட் தொழிற்சாலைகளிலும் முக்கிய மூலப்பொருளாக பயன்படுகிறது.

இது அரியலூர், பெரம்பலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கிடைக்கின்றது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க 17.31.0 ஹெக்டேர் பரப்பில் 5 குத்தகைகள் இயங்கிவருகின்றன.

iv. **சோப்ஸ்டோன்**

- ✓ இக்கனிமம் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் கிடைக்கின்றது. இக்கனிமம் டால்கம் பவுடர் மற்றும் அலங்காரப் பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 3.28.5 ஹெக்டேர் பரப்பில் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

v. **குவார்ட்ஸ் & பெல்ஸ்ஃபார்**

- ✓ இக்கனிமங்கள் சேலம், கரூர், திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் கிடைக்கின்றன. இவை கண்ணாடி, வெப்பந்தாங்கி கற்கள், வார்ப்பாலை, பீங்கான், மின்சாதனம், உராய்ப்பான் மற்றும் வண்ணத் தொழிற்சாலைகளில் முக்கிய மூலப்பொருளாக பயன்படுகிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க மேற்கண்ட மாவட்டங்களில் 25.24.6 ஹெக்டேர் பரப்பில் 13 குத்தகைகள் இயங்கிவருகின்றன.

vi. **சிலிக்காமணல்**

- ✓ இக்கனிமம் கண்ணாடி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் வார்ப்பாலைகளில் வினையூக்கிகளாகப் பயன்படுகிறது. இது விழுப்புரம், நாகப்பட்டினம், செங்கல்பட்டு மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் கிடைக்கிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க செங்கல்பட்டு மாவட்டத்தில் 2.77.0 ஹெக்டேர் பரப்பில் ஒரு குத்தகை நடைமுறையில் உள்ளது.

**(இ) எண்ணெய் கனிமம்**

**எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு:**

- ✓ எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் (ONGC) கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, அரியலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவினை உற்பத்தி செய்து வருகிறது.

8. **தமிழ்நாடு கனிம நிறுவனம்**

- ✓ தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம் 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. பெருங்கனிமங்கள் மற்றும் கிரானைட் உள்ளிட்ட சிறு கனிம வளங்களை கண்டறிதல் மற்றும் அவைகளை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றம் செய்து சந்தையில் விற்பதை தமிழ்நாடு கனிம நிறுவனம் தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனம் கருப்பு, வண்ண கிரானைட் கற்கள், பெருங்கனிமங்களான சுண்ணாம்புக்கல், கிராஃபைட், போன்ற கனிமங்களை அறிவியல் முறையில் வெட்டியெடுத்து முறையாக விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனம், நிறுவனம், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான கிரானைட் கற்பலகைகள், ஓடுகள், சுவர் பலகைகள், நினைவுச்சின்னங்கள் போன்றவற்றை பல்வேறு நாடுகளில் விற்பனை செய்து தனக்கென ஓர் சந்தையை உருவாக்கியுள்ளது.

9. **தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்**

- ✓ தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனமாக தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனம் 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. குரும்பம்பட்டி காப்புக்காட்டு பகுதியில் 96.34

ஹெக்டேர் பரப்புடைய சுரங்க குத்தகை அரசிடம் இருந்து இந்நிறுவனம் பெற்றுள்ளது. சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை அமைச்சகத்தின் கடித எண்.Z-11013/89/2017-IA.II2 (M), நாள்: 12.4.2018ன் படி, TANMAG நிறுவனத்தின் சுரங்க நடவடிக்கைகளை 14.4.2018 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. 13.4.2018 அன்று சுற்றுச்சூழல் அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டது.

- ✓ மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) 14.10.2020 அன்று சுற்றுச்சூழல் அனுமதியை (EC) வழங்கியது. இதையடுத்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் 10.11.2020 அன்று சுரங்கங்களை இயக்க ஒப்புதல் அளித்தது. நிறுவனம் மீண்டும் 19.11.2020 அன்று சுரங்கப் பணியை தொடங்கியது. இந்திய சுரங்க பணியகம் (IBM) அங்கீகரித்த சுரங்கத் திட்டத்தின் படி 5 ஆண்டுகளில் 6, 00,590 மெ.டன் மேக்னசைட் மற்றும் 5,67,077 மெ.டன் டூனைட் உற்பத்தி செய்ய சுற்றுச்சூழல் அனுமதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதியாண்டும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து சுரங்கத்தை இயக்க அனுமதி பெறப்படுகிறது.
- ✓ சுரங்கம் 5 மீட்டர் ஆழத்திற்கு கீழ் இயங்கக் கூடாது என்ற தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் கட்டுப்பாட்டினால்.
- ✓ சுரங்க செயல்பாடுகளின் பரப்பு 96 ஹெக்டேரிலிருந்து 3 ஹெக்டேராக குறைந்துள்ளது.
- ✓ சுரங்க செயல்பாடுகள் மேற்பரப்பு பகுதியில் மட்டும் செயல்படுவதால் கச்சாமேக்னசைட் மீட்பு விகிதம் 6 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைந்துள்ளது.
- ✓ எனவே எதிர்பார்த்த அளவு உற்பத்தியை எட்ட இயலவில்லை.
- ✓ நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 100/- மதிப்புள்ள 50 லட்சம் பங்குகள் கொண்ட ரூபாய் 50 கோடி ஆகும். செலுத்தப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் ரூபாய் 100/- மதிப்புள்ள 16, 65,000 பங்குகள் கொண்ட ரூபாய் 16.65 கோடி ஆகும்.

**செயல்பாடுகள்:**

- ✓ திறந்த வெளி சுரங்க முறையில் தகுதியுள்ள அனுபவமிக்க பணியாளர்கள் மற்றும் பகுதி இயந்திரங்களை கொண்டு (Semi Machanised) கச்சா மேக்னசைட் வெட்டி எடுக்கும் பணியில் டேன்மேக் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இந்நிறுவனம் நவீன முறையில் விஞ்ஞான ரீதியாக சுற்றுச் சூழலைப் பாதுகாத்து கனிமத்தை வெட்டி எடுக்கின்றது. மேக்னசைட்டை தோண்டி எடுக்கும்போது டூனைட் என்ற கனிமமும் துணை தாதுவாக கிடைக்கின்றது.
- ✓ கச்சா மேக்னசைட் சுரங்க முறையானது இடத்தை தேர்வு செய்தல் துளையிடுதல், வெடி வைத்தல், எடுத்தல், வரிசைப்படுத்துதல், அடுக்கி வைத்தல், கழிவுகளைஅகற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கியது. இந்நிறுவனம், சுரங்கப் பிரிவு (Mines Division), சுழற்சூளைப் பிரிவு (Rotary Kiln Division) மற்றும் நிலைச்சூளைப்பிரிவு (Shaft Kiln Division) ஆகிய மூன்று பிரிவுகளை கொண்டுள்ளது.

**வழிகாட்டி நிறுவனம்**

**அறிமுகம்:**

- ✓ வழிகாட்டி நிறுவனம் (முன்பு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்), தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்களை ஈர்ப்பதற்காக 1992-ல் பதிவு பெற்ற இலாப நோக்கமற்ற சங்கமாகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல், பல்வேறு தொழில் திட்டங்கள் வாயிலாக ஐந்து இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கும்

மேலான முதலீடுகளை பல்வேறு துறைகளில் ஈர்த்துள்ளது. தமிழ்நாட்டில் முதலீடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றிற்கான சூழல் அமைப்பினை மாற்றி அமைத்திடுவதற்கான முயற்சிகளை வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

**கொள்கை இலக்கு:**

- ✓ மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, தொழில் முனைவோர்க்குத் தேவைப்படும் தகவல்களை அளிப்பதும், முதலீட்டாளர்கள் தொழில் துவங்க தேவையான உதவிகளை வழங்குவதுமே, வழிகாட்டி நிறுவனம் துவக்கப்பட்டபோது அதன் நோக்கமாக இருந்தது.
- ✓ தமிழ்நாடு வணிகம் புரிதலை எளிதாக்குதல் சட்டம் 2018–ன் மூலமாக, பெரிய தொழில் நிறுவனங்களுக்கு, ஒற்றைச் சாளர முறையில் பல்வேறு துறை / நிறுவனம் சார்ந்த தொழில் அனுமதிகளை குறிப்பிட்ட வரம்பிற்குள் வழங்குவதற்கும், சிறப்பு ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் வழங்குவதற்கான முகமையாக செயல்படவும் வழிகாட்டி நிறுவனத்திற்கு சட்டபூர்வமான பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, மாநில அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு முகமையாக விளங்கும் வழிகாட்டி நிறுவனம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தெற்கு ஆசியாவிலேயே முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் பொருட்டு பின்வரும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது:–
- ✓ முதலீடு ஊக்குவிப்பு
- ✓ முதலீடுகள் மேற்கொள்வதற்கான ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்ட பின் வழங்கப்படும் சேவைகள்
- ✓ வணிகம் புரிதலை எளிதாக்குதல்
- ✓ வெளிப்புற ஈடுபாடுகள்
- ✓ கொள்கை மற்றும் ஆராய்ச்சி
- ✓ மண்டலங்களைச் சென்றடைதல்
- ✓ ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு

**தொழில் தோழன்:**

- ✓ தொழில் தோழன் (Biz Buddy) என்பது முதலீட்டாளர்களுக்கும், மாநில அரசுக்கும் இடையிலான அரசு–வணிக சேவைகளை எளிதாக்கிடும் நோக்கத்தில் வடிவமைக்கப்பட்ட ஒரு தொழில் உதவி இணையதளம் ஆகும்.

**தொழில்–தோழன் இணையதளத்தின் முக்கிய நோக்கங்கள்:**

- ✓ முதலீட்டாளர்களுக்கு ஒரு நெறிப்படுத்தப்பட்ட தீர்வு முறையை உருவாக்கி, விரைவான தீர்வுகளை அளித்தல்
- ✓ திட்டங்கள் அமைத்திட்டபின் தேவைப்படும் சேவைகளைச் சிறப்புற அளிப்பதன் மூலம் மாநிலத்தில் தொழில் முதலீட்டிற்கான சூழலை மேம்படுத்துதல்.
- ✓ 2022 மார்ச் 31 வரையில், 244 உதவி அழைப்புகள் வரப்பெற்று, அவற்றில் 232 உதவி அழைப்புகளுக்கு தீர்வு அளிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தொழில் முனைவோரின் செயலாக்க நேரம் 85 சதவிகித அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

**10. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்**

- ✓ தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை திட்டமிடுதல், மேம்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல் ஆகியவற்றில் தமிழ்நாடு அரசின் ஒரு முன்னோடி நிறுவனமாக விளங்கி

வருகிறது. 1971-ம் ஆண்டில் துவங்கப்பட்ட சிப்காட் நிறுவனமானது கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதோடு, பாதுகாப்பான சுற்றுச்சூழலுடன் கூடிய பசுமைத் தொழில் பூங்காக்களை உருவாக்கி வெற்றிகரமாக இயங்கி வருகிறது. உலகளவில் முதல் 500 பெரிய நிறுவனங்களில், 80 தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை சிப்காட் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ளன. சிப்காட் நிறுவனம் 35,034 ஏக்கர் நிலப்பரப்பளவில் அமைத்துள்ள தொழிற்பூங்காக்கள் மூலம் 2,911 தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், 1.40 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டினை ஈர்ப்பதற்கும், 7.09 லட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்குவதற்கும் கருவியாக இருக்கின்றது.

- ✓ தமிழ்நாட்டின் தொழில் மேம்பாட்டில் நீண்ட காலமாக முக்கிய பங்காற்றி வரும் சிப்காட் நிறுவனத்தின் மூன்று முதன்மையான குறிக்கோள்களாவன:-
  - ✓ உலகத்தரத்திலான தொழில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
  - ✓ திறன் வாய்ந்த தொழிற் பூங்கா ஆளுமை மற்றும் மேலாண்மை அமைப்பு முறை உருவாக்குதல்
  - ✓ நீடித்த நிலைப்பெறத்தக்க தொழில் சூழல் அமைப்பை மேம்படுத்துதல்
- ✓ சிப்காட் நிறுவனம் தனது தொழில் பூங்காக்களில், சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு, நீர் வழங்குதல், நிர்வாக அலுவலகம் மற்றும் பொதுவான வசதி, திடக்கழிவு மேலாண்மை, பசுமைச் சூழல் உருவாக்கம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை அளித்து வருகின்றது. மேலும், சிப்காட் நிறுவனமானது அதன் தொழிற்பூங்காக்களில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான வீட்டுவசதிகள், புத்தாக்க மையங்கள், வணிக வசதி மையங்கள், ஆயத்த தொழிற்கூட வசதிகள் போன்ற சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.
- ✓ தமிழக அரசின் தொலைநோக்கு திட்டங்களுக்கு ஏற்ற வகையில், சிப்காட் நிறுவனம் புதிதாக உருவாக்கப்படும் தொழிற்பூங்காக்களில் நிலைபெறத்தக்க மற்றும் விரிவான தொழில் சூழல் அமைப்பை ஏற்படுத்த முனைந்து வருகிறது. துறைவாரியான தொழில் நிறுவனங்களின் தேவை அடிப்படையிலும், குறிப்பிட்ட தொழிற்சாலைகள் ரீதியான மண்டலங்கள் அடிப்படையிலும் தொழில் பூங்காக்களை உருவாக்க தேவையான விரிவான திட்ட அறிக்கையினை தயாரிப்பதற்கு, அனுபவமிக்க தொழில் வல்லுநர்கள் மற்றும் மேலாண்மை ஆலோசகர்களை சிப்காட் நிறுவனம் பணியமர்த்தியுள்ளது.
- ✓ சிப்காட் நிறுவனம், தனது வெளிப்படையான நில ஒதுக்கீட்டுக் கொள்கைகளின் மூலமாகவும், தடையற்ற இணையவழிச் சேவைகள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்யும் செயல்பாடுகளின் மூலமாகவும், தொழில் நிறுவனங்களுக்கு தொழில் செய்ய ஏதுவான வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. இதன் மூலம், சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் தொழில் செய்வதற்கு உகந்த சூழலை மேம்படுத்துவதுடன், தொழில் தொடங்குவதற்கு ஏற்ற மாநிலமாக தமிழ்நாட்டை முதலீட்டாளர்கள் கருதுவதற்கு முக்கிய காரணமாகவும் அமைந்துள்ளது.
- ✓ தொழில் பூங்காக்களை திறமையாக நிர்வகிக்கும் முறைகளின் மூலம் சிப்காட் நிறுவனம், முதலீட்டாளர்களுக்கு ஏற்ற வகையில் நிலத்தை திரும்ப ஒப்படைத்தல் மற்றும் நில உள்குத்தகை மூலமாக தனது தொழில் பூங்காக்களில் உள்ள தொழில் மனைகளின் திறன்மிகு பயன்பாட்டினை மேற்கொண்டு வருகிறது. மேலும், தனியாருடன் கலந்து பேசி நிலம் கையகப்படுத்தும் கொள்கை மூலம், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, புதிய நிலங்களை திறம்பட பெற்று வருகிறது. வருகிறது.

மேலும், பங்கேற்பு கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மூலம் தொழில் பூங்காக்களில் இணக்கமான கட்டமைப்பு வசதிகளை சிப்காட் நிறுவனம் திறம்பட உருவாக்கி வருகிறது.

- ✓ நிலையான வளர்ச்சி குறிக்கோள்களுடன், உலகத்தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம் மாநிலத்தில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மற்றும் நிலைக்கத்தக்க தொழில்மயமாக்கலில் சிப்காட் நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், சிப்காட் நிறுவனத்தால் நீர் மேலாண்மை மற்றும் கழிவுநீர் மறுசுழற்சி, நீர்நிலைகளை புத்தாக்கம் செய்தல், தொழிற்பூங்காக்களில் பெருமளவு பசுமைச்சூழலை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு வகையான முன்னெடுப்புகளின் மூலம் சிப்காட் தனது தொழிற் பூங்காக்களை பசுமையாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், மாசற்ற பாதுகாக்கப்பட்ட பகுதியாகவும் மாற்றியமைத்து வருகிறது.

**11. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

- ✓ தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், தொழில் மூலதன முதலீட்டை ஈர்க்கவும், தனியார் தொழில் முனைவோர் மற்றும் மத்திய/மாநில அரசு நிறுவனங்களுடன் இணைந்து கூட்டாண்மை நிறுவனங்கள் மூலம் பெரிய / நடுத்தர தொழில் திட்டங்களை நிறுவ, 1965–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது. மேலும், பெரும் முதலீடு மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய பெரிய தொழில் மற்றும் கட்டமைப்பு திட்டங்களை மாநிலத்தில் நிறுவ டிட்கோ வழிவகை செய்கிறது.
- ✓ உற்பத்தி துறை, சேவை துறை மற்றும் கட்டமைப்பு துறைகளைச் சார்ந்த 116 கூட்டாண்மை நிறுவனங்களை டிட்கோ நிறுவனம் நிறுவியுள்ளது. இது தவிர, டிட்கோ நிறுவனம் சமீபத்தில், மேலும் 3 புதிய கூட்டாண்மை நிறுவனங்களான டைடல் நியோ, தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி திறன் மிகு மையம் (TANCAM), திருச்சிராப்பள்ளி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப குழுமம் (TREAT) ஆகியவற்றை உருவாக்கியுள்ளது.
- ✓ டைட்டன் நிறுவனம், ஸ்பிக், டான்பேஃக், டான்ஃப்ளோரா, JSW ஸ்டீல்ஸ், இந்தியன் ஆயில்–எல்என்ஜி (LNG) முனையம், தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ், மகிந்திரா வேர்ல்டு சிட்டி, அசென்டாஸ் தகவல் தொழில் நுட்ப பூங்கா, டைடல் பார்க், டைசல் பயோ பார்க், மெரைன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலப்மென்ட் பிரைவேட் லிமிடெட் (காட்டுப்பள்ளி துறைமுகம்), எல்&டி கப்பல் கட்டுமானம் லிமிடெட், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை, சென்னை வர்த்தக மையம் மற்றும் இராமானுஜன் தகவல் தொழில்நுட்ப நகரம் போன்றவை பிரபலமாக செயல்பட்டு வரும் டிட்கோவின் கூட்டாண்மை நிறுவனங்களுள் சிலவாகும். மேலும், நிதிநுட்ப நகரம், வானூர்தி / வான்வெளி மையம், பாலிமர் தொழிற் பூங்கா மற்றும் மருத்துவ பூங்கா உள்ளிட்ட முக்கிய திட்டங்களை சென்னை மாவட்டம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் டிட்கோ நிறுவனம் தற்போது செயல்படுத்தி வருகிறது.

**நிதிநுட்ப நகரம்:**

- ✓ உலகளவில் சிறந்த நிதிசார் மையமாக சென்னையை உருவாக்குவதற்காக சென்னை மாவட்டம், ஆலந்தூர் தாலுகா, நந்தம்பாக்கம் கிராமத்தில் ஏறக்குறைய 122.69 ஏக்கர் நிலப்பரப்பில் ''நிதிநுட்ப நகரத்தை'' உருவாக்குவதற்கு டிட்கோ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிதிநுட்ப நகரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகள், வங்கி சாரா நிதி சேவை நிறுவனங்கள், நிதி வணிக செயல்முறை ஒப்பந்த நிறுவனங்கள், நிதி ஒழுங்குமுறை நிறுவனங்கள், நிதி சந்தை செயல்பாட்டு நிறுவனங்கள், பயிற்சி மையங்கள்

பயிற்சி மையங்கள் போன்றவற்றை அமைப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டிருக்கும். இத்திட்டத்திற்கான சாத்தியகூறு அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது.

- ✓ டிட்கோ இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு, நந்தம்பாக்கம் கிராமத்தில் உள்ள சுமார் 61.09 ஏக்கர் நிலத்திற்கான ''முன்நுழைவு அனுமதி'' வழங்கியுள்ளது. மேலும், சென்னை, ஆலந்தூர் தாலுகாவிலுள்ள, நந்தம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் கிராமங்களில் உள்ள சுமார் 61.60 ஏக்கர் நிலத்தை, டிட்கோவிற்கு ''உரிமை மாற்றம்'' செய்து வழங்கியுள்ளது.
- ✓ நிதிநுட்ப நிறுவனங்கள் தங்களது செயல்பாடுகளை நிறுவுவதற்காக, நிதிநுட்ப திட்டத்தின் ஒரு பகுதியாக, 5 லட்சம் சதுரஅடி பரப்பளவில் சர்வதேச தரநிலைகளோடு ஒரு ''ஃபின்டெக் டவரை'' உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்களுக்கு நிலம் மற்றும் அலுவலகத்திற்கான இடங்கள் வழங்கப்படும். மாநிலத்தில் புத்தொழில் சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்காக இந்நிதிநுட்ப நகரத்தில், புத்தொழில் மையம் அமைப்பதற்கும் பிற இதர நிறுவனங்கள் தங்கள் தொழிலை உடனடியாக தொடங்கும் வசதிக்கென ஒரு சிறப்பு வடிவமைப்புடன் கூடிய கட்டடத்தை உருவாக்கி அதில் இடமளிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.
- ✓ இச்செயல்திட்டத்திற்கான ஒரு விரிவான பெருந்திட்டம் (மாஸ்டர் பிளான்), தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் பெருந்திட்டத்தை செயல்படுத்துவதற்கு, ஒரு "திட்ட மேலாண்மை ஆலோசகரை (PMC)" தேர்வு செய்யும் பணியில் டிட்கோ தற்போது ஈடுபட்டு வருகிறது.

**வானூர்தி மையம் (Aero Hub):**

- ✓ தமிழ்நாடு பாதுகாப்பு தொழிலக வழித்தடத்தின் ஒரு பகுதியாக, ஒரு ''வானூர்தி மையத்தை'' ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள வானூர்தி தொழில் பூங்காவின் அமைவிடத்திற்குள் டிட்கோ நிறுவனம், நிறுவி வருகிறது. இம்மையம், வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம், வானூர்தி மின்னணுவியல் உதிரிபாகங்கள் உற்பத்தி வளாகம், பரிசோதித்து சான்றிதழ் வழங்கும் வசதி, பொது சேமிப்பு கிடங்கு, திறன்மிகு மையம் (Centre of Excellence) மற்றும் திறன் மேம்பாட்டு மையம் (Skill Development Centre) போன்ற வசதிகளைக் கொண்டதாக அமையும். இத்திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டப் பணிகள், சுமார் 230 கோடி ரூபாய் செலவில், 3.5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பார்க் சென்னை நிறுவனத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் பிப்ரவரி 2023-க்குள் நிறைவடையும்.

**12. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

- ✓ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக 1949ஆம் ஆண்டில் இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட மாநில அளவிலான முன்னோடி தொழில் மேம்பாட்டு நிதி நிறுவனமாகும். இக்கழகம், தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு தேவையான நிதியுதவி வழங்கி வருகிறது. முக்கியமாக, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களின் கனவுகளை நனவாக்குவதற்கு ஊக்கமளிப்பதன் மூலம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கும் வகை செய்கிறது. இக்கழகத்தின் மொத்த நிதி உதவியில் 90 விழுக்காட்டிற்கும் மேலாக, குறு,

சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும், அதில் 40 விழுக்காடு, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

- ✓ இக்கழகம், 31.03.2022 வரை 1,29,129 நிறுவனங்களுக்கு 21,231.36 கோடி ரூபாய் அளவிற்கு கடன் அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவினாலும், வழிக்காட்டுதலாலும், இக்கழகம் 2003-04 ஆம் ஆண்டிலிருந்து, கடந்த 19 வருடங்களாக தொடர்ந்து நிகர இலாபம் ஈட்டி வருகிறது. 2021-22 ஆம் நிதியாண்டில், 75.00 கோடி ரூபாய் அளவிற்கு நிகர இலாபம் (தற்காலிகம்) ஈட்டியுள்ளது.
- ✓ TIIC 1.0 என்ற அளவில், கடந்த 72 ஆண்டுகளாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகித்துள்ளதுடன், இதுவரை 1.29 இலட்சத்திற்க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்களின் கனவுகளை நினைவாகி உள்ளது.
- ✓ தற்போது, இந்நிறுவனம் மாநிலத்தின் வளர்ச்சி ஊக்கியாக தன்னை நிலை நிறுத்தி TIIC 2.0 க்கு சீர்மாற்றம் பெறுவதற்காகவும், தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் தொடர்புடைய CII, TANSTIA, Friedrich Naumann Foundation (FNF) மற்றும் NIT — Trichy போன்ற பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்துள்ளது.
- ✓ தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் பெருவழித்தடத்தில் அமைந்துள்ள சென்னை, ஓசூர், சேலம், கோவை மற்றும் திருச்சி ஆகிய ஐந்து முனையங்களில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதுகாப்பு துறைக்கான உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், இந்திய பாதுகாப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் (SIDM) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும் இந்நிறுவனங்களுக்கு சிறப்பு மூலப்பொருள்கள் கிடைத்திடும் வகையல் தேசிய சிறு தொழில் நிறுவனம் (NSIC) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் பாதுகாப்புத் துறைக்கான பாகங்கள் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் BHEL சார்பு தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் பாரத மிகுமின் நிறுவனம் (BHEL) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையொப்பமிட்டுள்ளது மற்றும் பாதுகாப்பு துறையில் புத்தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு கோவை மாவட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் சங்கமான CODISSIA-AIM உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் சிறப்பு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. இதன் மூலம் பாதுகாப்பு துறைக்கான உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ ஏதுவாகும்.
- ✓ மேலும், இக்கழகம் CII மற்றும் சில ஆர்வலர்களுடன் இணைந்து ''தொழில் நிறுவனங்கள் எதிர்காலத்திற்கு தயார்படுத்திக் கொள்ளல்'' என்ற கருப்பொருளுடன் மண்டல அளவில் இரண்டு தொழில் வளர்ச்சி மாநாடுகளை நடத்தியுள்ளது.
- ✓ **புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur cum Enterprise Development Scheme - NEEDS)**
- ✓ படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், தொழில் முனைவோருக்கு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம்,

அதிகபட்சமாக 75 இலட்சம் ரூபாய் வரை மூலதன மானியமாக மாநில அரசு வழங்குகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு 6 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உதவி பெற தொழில் முனைவோரின் சொந்த பங்களிப்பு, சிறப்பு பிரிவினருக்கு, அதாவது மகளிர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கு 5 சதவீதமாகவும், மற்ற பிரிவினருக்கு 10 சதவீதமாகவும் குறைந்த அளவிலான வரம்பு நிர்ணயித்திருப்பது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் 31.03.2022 வரை 952 முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு 57.88 கோடி ரூபாய் மூலதன மானியத்துடன், 537.20 கோடி ரூபாய் கடன் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில், 149 தொழில் முனைவோருக்கு 8 கோடி ரூபாய் மூலதன மானியத்துடன், 118.77 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**13. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்**

- ✓ தமிழ்நாடு அரசு, கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாகக் கொண்டு செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிப்பதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை, 1979 ஆம் ஆண்டு நிறுவியது. ஆண்டொன்றுக்கு 90,000 டன் காகித உற்பத்தித் திறனுடன், 1985 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம் புகளூரில் இதன் ஆலை (அலகு-I) துவக்கப்பட்டது. தற்போது ஆலையின் காகித உற்பத்தி திறன், நான்கு கட்டங்களில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆலையின் காகித கூழ் உற்பத்தியும், நாளொன்றுக்கு 250 டன்னிலிருந்து, 1,180 டன் உற்பத்தி திறனுடையதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்நிறுவனம், ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் திறன் கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் ஆலையை (அலகு-II) 2016 ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவியது. இந்நிறுவனத்தின் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு 6,00,000 டன் ஆகும். இதன் மூலம், இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மூன்றாம் இடம் வகிக்கிறது.
- ✓ பயனாளர்களின் தேவைகளுக்கேற்ப பல்வகை உயர் ரக காகிதங்கள் மற்றும் அடுக்கு காகித அட்டைகளை இந்நிறுவனம் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம், தனது உற்பத்திப் பொருள்களை, இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருவதோடு, தனது காகித உற்பத்தியில் சுமார் 20 சதவீதத்தை, உலகளவில் சுமார் 35 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம் இந்திய அளவில், அதிக அளவிலான அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதி செய்யும் நிறுவனமாக திகழ்கிறது.
- ✓ காகித தயாரிப்பின் போது உருவாகும் திடக் கழிவுகளான சுண்ணாம்பு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, இந்நிறுவனம் நாளொன்றுக்கு 900 டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவியுள்ளது.
- ✓ தனது மரக்கூழ் உற்பத்திக்கு தேவைப்படும் கூழ் மரங்களின் சுயதேவையை பூர்த்தி செய்வதற்கு, பண்ணைக் காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட காடுகள் வளர்ப்பு திட்டங்களை இந்நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இந்த திட்டங்களில் கூழ்மர வளர்ப்பினை விவசாயிகளின் பங்கேற்புடன் இந்நிறுவனம் செயல்படுத் வருகிறது. இத்திட்டங்களின் மூலம் 2022 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 31 நாளது வரையில், தமிழகம் முழுவதும், 2,11,280 ஏக்கர்

நிலப்பரப்பில் கூழ் மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 40,379 விவசாயிகள் பங்கு பெற்றுள்ளனர்.

- ✓ இந்நிறுவனம், மின் உற்பத்தியில் தன்னிறைவினைப் பெற்றுள்ளது. ஆலையின் சுய தேவைக்காக, 103.62 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவினை காகித ஆலையின் வளாகத்திலும் மற்றும் 50 மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவினை அடுக்கு காகித அட்டை வளாகத்திலும் நிறுவியுள்ளது. மேலும், மேலும், 35.5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவியுள்ளது. ஆலையின் தேவைக்குப் பின் மீதமுள்ள உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மாநில தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
- ✓ இந்நிறுவனத்தில், தமிழக அரசு 35.32 விழுக்காடு பங்கும், தமிழக அரசு சார்ந்த நிறுவனங்கள் 4.06 விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள், பரஸ்பரநிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் வசம் உள்ளன.

**14. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்**

- ✓ உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த சிமெண்டின் பயன்பாடு இன்றியமையாதது என்பதால் நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு சிமெண்ட் உற்பத்தி துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை கருத்தில் கொண்டு, சந்தையில் போட்டித் திறனுடன் தனது இருப்பை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு, சிமெண்ட் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்வதற்காக, 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாளன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்திற்கு (டிட்கோ) முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) நிறுவப்பட்டது. 1994 முதல் இந்நிறுவனம் தனி பொதுத்துறை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. 21 பெரிய சிமெண்ட் ஆலைகள் தனியார் துறையின் மூலமும், 4 சிமெண்ட் ஆலைகள் பொதுத்துறை நிறுவனங்கள் மூலமும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 50 மில்லியன் மெ.டன் உற்பத்தி அளவுடன் இந்தியாவில் அதிக சிமெண்ட் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் ஐந்தாவது மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. 1969 ஆம் ஆண்டு ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நிறுவியதன் மூலம் இந்தியாவில் அரசுத் துறையின் கீழ் சிமெண்ட் உற்பத்தி செய்யும் முதல் மாநிலமாக விளங்குவதில் தமிழ்நாடு பெருமை கொள்கிறது. மேலும், 1979 ஆம் ஆண்டு உலர்பத தொழில்நுட்பத்தில் அரியலூரில் ஆண்டொன்றிற்கு 5 இலட்சம் மெ.டன் உற்பத்தி அளவுடன் கூடிய மற்றொரு சிமெண்ட் ஆலை அமைக்கப்பட்டது.
- ✓ டான்செம் நிறுவனம் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட மற்றொரு அதி நவீன சிமெண்ட் ஆலையை அரியலூரில் நிறுவி, 2019 ஆம் ஆண்டில் உற்பத்தியினை தொடங்கியது. இதன் காரணமாக, டான்செம் நிறுவனத்தின் மொத்த உற்பத்தி அளவு, ஆண்டு ஒன்றுக்கு 17 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், வெளிசந்தையில் டான்செம் நிறுவனத்தின் பங்கு சுமார் 8 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது. முன்னதாக டான்செம் நிறுவனமானது, பிரதானமாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கும் பிற மத்திய அரசுத்துறைகளுக்கும் மாநில அரசுகளினால், ஏழை மற்றும் நடுத்தர மக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு, அரசு நிர்ணயித்த குறைந்த விலையில் சிமெண்ட் வழங்கி வந்தது. தற்போது, டான்செம் நிறுவனமானது வெளிச்சந்தையிலும், தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களின் விலையைவிட குறைவான விலையில் சிமெண்ட் விற்பனை செய்து வருகிறது. இதன்மூலம்,

வெளிச்சந்தையில் சிமெண்ட் விலையை கட்டுபடுத்துவதில் முக்கிய கருவியாக டான்செம் நிறுவனம் விளங்குகிறது.

**15. தமிழ்நாடு உப்பு நிறுவனம்**

- ✓ இந்திய அளவில் உப்பு உற்பத்தியில் இரண்டாவது மிகப்பெரிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இந்தியாவில் ஆண்டொன்றுக்கு சுமார் 300 இலட்சம் மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் மொத்த உப்பு உற்பத்தியில் சுமார் 8 விழுக்காடு, அதாவது 24 இலட்சம் மெட்ரிக் டன் உப்பு, தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் மட்டுமே, இந்திய அளவில் மாநில அரசுக்கு சொந்தமான உப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனமாகும்.
- ✓ தமிழ்நாடு உப்பு நிறுவனம், 1974 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்நிறுவனம் உப்பு மற்றும் உப்பின் உடன் விளை பொருட்களை உற்பத்தி செய்து, நியாயமான விலையில் விற்பனை செய்யவும், வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கிலும் துவக்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த 5,236 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு, தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. அதனை தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டத்தில் 3,010 ஏக்கர் நிலத்தை நீண்ட கால குத்தகைக்கு தமிழ்நாடு அரசு வழங்கியது.
- ✓ இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டு முதல், இராமநாதபுரம் மாவட்டத்தில் வணிக அடிப்படையில் உப்பு உற்பத்தியினைத் துவக்கியது. இதில் தொழிலக தரமுடைய உப்பு, அயோடின் உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு ஆகியவை அடங்கும். இத்திட்டம் 1,250 நபர்களுக்கு நேரடியாகவும், 300 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றது. இதனைச் சுற்றியுள்ள 15 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.